# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2438/25 - 2025 මැයි මස 27 වැනි අඟහරුවාදා - 2025.05.27

*2438/25 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**“ A” தர பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையினை “ B” தர ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்துதல்**

ஊவா மாகாண சுகாதார அமைச்சின் நிருவாகத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலை, பண்டாரவளை பிரதேச மக்களுக்கு மட்டுமன்றி உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளுக்கும் இருதர சுகாதார நலசேவைகளை வழங்குவதற்காக அங்கு மருத்துவப் பணி மற்றும் சேவைகளை விரிவுபடுத்துவதற்கான அவசியம் நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இத் தேவைகளை நிறைவேற்று முகமாக, "A" தர பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையினை, உடன் செயல்படுமாறு, “B” தர ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்த சுகாதார மற்றும் சமூக ஊடகத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன் அடிப்படையில் இவ்வைத்தியசாலை 2020.03.03 ஆந் திகதிய, பொது சுற்று நிருப இலக்கம் 01-18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையான சிறப்புப் பொது மருத்துவ விசேஷ சேவைகளான, மருத்துவப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு, பெண் நோயியல் மற்றும் மகப்பேற்றுப் பிரிவு, குழந்தை நோய் பிரிவு, கதிர் இயக்கப் பிரிவு, தோல் நோய் மற்றும் திடீர் விபத்துக்குரிய வைத்திய சேவைகளை வழங்கும் “B” தர ஆதார வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்யப்படும்.


1A - G 44439 — 34 (2023/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இதனைத் தவிர ஒருங்கிணைந்த ஆயுர்வேத வைத்திய சேவைகளும் செய்து தரப்படும். மேலும், இவ் வைத்தியசாலை ஊவா மாகாண சபை நிருவாகத்தின் கீழ் செயல்படுவதுடன், இவ் வைத்தியசாலையின் பிரதான அலுவலரின் பதவி “மருத்துவ அத்தியட்சகர்” எனப் பெயரிடப்படும்.

**விசேஷ வைத்திய அதிகாரி அனில் ஜாசிங்க,**
செயலாளர்,
சுகாதார மற்றும் சமூக ஊடகத்துறை
அமைச்சு.

இலக்கம் 385, “சுவசிரிபாய”,
பூஜ்ய பெத்தேகம விமலவங்ச ஹிமி மாவத்த,
கொழும்பு 10,
2023, மே 24.

EOG 05 - 0186